**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.341/2020**

**பி.வா.சா. 1 சுப்பிரமணி**

**நாள். 30.09.2024.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்களில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் 173/5, 173/6 ஆகிய இரண்டு சர்வே எண்களில் வீடு உள்ளது. விஸ்தீரணம் அளவு சரியாக தெரியவில்லை. சர்வே எண் 173/6 என்பது உட்பிரிவு செய்யப்பட்டு 6A மற்றும் 6 B என உள்ளது என்றால் தெரியாது. அதே போல் சர்வே எண். 173/5 என்பது 5A1 , 5A2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு 78 1/2 செண்ட் அளவிற்குத்தான் வாதி வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தற்போது தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இதே சர்வே நம்பர்களில் 78 1/2 செண்ட் போக கூடுதலாக நிலம் உள்ளது என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. நான் எந்த வரும் தாவா சொத்துக்களில் வந்தேன் என்றால் 1995 லிருந்து குடியிருக்கிறேன். நான் குடி வந்த போது பட்டா முத்துச்சாமி கவுண்டர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். நான் எதன் அடிப்படையில் தாவா சொத்தில் அனுபவத்தில் வந்தேன் என்றால் பதியாத கிரையப்பத்திரத்தின் மூலம் அனுபவத்திற்கு வந்தேன். அந்த பதியாத கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துளேள்ன. 22.08.2001 ல் முத்துச்சாமி கவுண்டர் இறந்து விட்டார் என்றால் தேதி தெரியாது. ஆனால் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் 30.09.2013 ல் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் வீட்டை காட்டாமல் பாகம் பிரித்துக் கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினையில் சி ஷெடியூல் சொத்தில் 14,15 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரத்தை கொடுத்தால்தானே தெரிந்து கொள்ள முடியும். 28.07.2003 அன்று 14ம் பிரதிவாதியின் கணவர் இராமசாமி இறந்து விட்டார் என்றால் தேதி தெரியாது. இறந்தது தெரியும். இந்த வழக்கில் தாவா சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்று காண்பிக்க மூல ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பதிவு

செய்யப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யவில்லை என்பதால் பதிவு ஆவணங்கள் என்னிடம் இல்லை. திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.289/2014 என்ற வழக்கு 14,15 பிரதிவாதிகள் மீது போட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டு போட்டேன் என்றால் வீடு குடியிருக்கிறோன் என்று கேட்டு போட்டோம். அனுபவ பாத்தியம் என்று சொல்லி அந்த வழக்கு போட்டேனா என்றால் ஆமாம். நான் அனுபவபாத்தியம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் அனுபவம் என்றும் முரண்பட்ட கருத்துக்கள் சொன்னதால்தான் அந்த வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் எங்கள் அனுபவத்தை உறுதி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அதே கருத்தை வலியுறுத்தித்தான் இந்த வழக்கிலும் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். OS.289/2014 தள்ளுபடி ஆன பின்புதான் இந்த வழக்கை வாதி முனியப்பன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவில் வாதி முனியப்பன் பெயரும் கூட்டாக சேர்க்கப்பட்டது என்றால் தெரியாது. தாவா வழக்குச் சொத்து 14,15 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரிந்த பின்புதான் 12.12.2005ல் தான் அனுமதியின் பெயரில் நான் தாவா சொத்தில் அனுபவத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. தற்காலிகமாக குடியிருந்து கொள்வதற்காக அனுமதி கேட்டு வந்து விட்டு தற்போது சொத்தை காலி செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உரிமையை காட்டக் கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 14,15 பிரதிவாதிகளிடம் திரும்ப ஒப்படைக்க கேட்ட பின்புதான் திண்டுக்கல் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. என் பெயரில் உரிமையை காட்டக் கூடிய பதிவு செய்யப்பட்ட ஆவணமோ, பட்டாவோ எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தாவாச் சொத்தை கிரையம் வாங்கியதற்கு முன்பே O,S.289/2014 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி, மின் அட்டை, குடும்ப அட்டை ஆகியவை போர்ஜரியாக தயார் செய்தவை என்றால் சரியல்ல. நான் சொல்லும் 22 ஓட்டு வீடுகளில் 1 முதல் 11 பிரதிவாதிகள் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1. முதல் பி.வா.சா.ஆ.7 ஆவணங்கள் இந்த 14,15 பிரதிவாதிகள் வாதியை தவிர மற்ற நபர்களுக்கு கிரையம் செய்த ஆவணங்கள் என்றால் சரிதான். 1 முதல் 11 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதாக சொல்லும் கிரையப் பத்திரங்கள் போர்ஜரியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பத்திரம் இந்த வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். வாதியை மிரட்டி பணம் பறிக்க சொத்து கிரையம் வாங்கப்பட்டதாக சொல்லி வீணான எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உரிமையாளர் என்ற முறையிலும், அனுபவ பாத்தியம் என்ற அடிப்படையிலும் முரண்பட்ட கட்சி செய்கிறேன் என்றும் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.30 19:43:02 +0530

Additional District Judge,

Dindigul.